Dinamani dated 8/3/18



# தாகூர் கல்லூரி மாணவர்களின் வருகைப்பதிவு இணையத்தில் பதிவேற்றம்

## அமைச்சர் கமலக்கண்ணன் தகவல்



தாகூர் கலைக் கல்லூரியில் மரக்கன்றுகளை நட்டு பசுமை வளாகத் திட்டத்தை தொடக்கிவைக்கிறார்கள் அமைச்சர்கள் இரா.கமலக்கண்ணன், ஷாஜகான்.

**புதுச்சேரி, மார்ச் 6:** புதுச்சேரி தாகூர் கலைக் கல்லூரியில் மாணவர்களின் வருகைப்பதிவு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் இரா.கமலக்கண்ணன் தெரிவித்தார்.

புதுச்சேரி தாகூர் கலை, அறிவியல் கல்லூரியில் பசுமை வளாகத் திட்டத்தின் ஒரு பகுதியாக அலங்கார செடிகள், பழ மரக்கன்றுகள் மற்றும் பூச்செடிகள் நடும் விழா புதன்கிழமை நடைபெற்றது.

இதில், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஷாஜகான், கல்வி அமைச்சர் இரா.கமலக்கண்ணன் ஆகியோர் பங்கேற்று பசுமைவளாகத் திட்டத்தை தொடக்கி வைத்து மரக்கன்றுகளை நட்டனர்.

அதனைத் தொடர்ந்து திறன் மிகு வகுப்பை (ஸ்மார்ட் கிளாஸ் ரூம்) திறந்துவைத்து, ஜெனரேட்டரை இயக்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அமைச்சர் கமலக்கண்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

புதுச்சேரி உயர் கல்வித்துறை கல்லூரி மாணவர்களுக்கு ஒழுக்கம் சார்ந்த கல்வியை அளிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, கல்லூரிகளில் மென்டர் சிஸ்டத்தை நிகழ் கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் முதலாமாண்டு மாணவர்களின் முழு விவரங்களை வகுப்பாசிரியர் பெற்றுக் கொண்டு, அந்த மாணவர் கல்வியில் செலுத்தும் அக்கறை, அவர்கள் பெற்றோர், வாழும் சூழல் ஆகியவற்றை கண்காணிப்பார்கள். இத்திட்டத்தை கடந்த 4 மாதங்களுக்கு முன்பு தொடங்கினோம். இத்திட்டம் அனைத்து கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கல்லூரியில் முதல்வர் மற்றும் பேராசிரியர் அடங்கிய குழு இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இதுமட்டுமல்லாது, தாகூர் கல்லூரி மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மாணவர்களின் ஒழுக்க சீர்கேடு, கல்வியில் பின்தங்குவது ஆகியவைகளுக்கு முக்கிய காரணமே அவர்கள் வகுப்பறைக்குச் செல்லாததுதான். அவர்கள் வகுப்புக்கு வந்தால் படிக்கத் தொடங்கிவிடுவார்கள். இதற்காகவே மாணவர்களின் வருகைப் பதிவை கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

இதன் மூலம் பிள்ளைகள் வகுப்புக்கு சென்றார்களா? என்பதை பெற்றோர்கள் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவிலேயே கலை, அறிவியல் கல்லூரி மாணவர்களின் வருகைப் பதிவை இணையதளத்தில் பதிவேற்றுவது தாகூர் கலைக் கல்லூரியாகத்தான் இருக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை இயக்குநர் யாசம் லட்சுமிநாராயணன், கல்லூரி முதல்வர் சசிகாந்த தாஸ், பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

---

Hindu dated 8/3/18

### புதுச்சேரியில் தாகூர் அரசுக் கல்லூரியில்

# மாணவர்களின் வருகைப்பதிவு இணையத்தில் பதிவேற்றம்

● பெற்றோர் கண்காணிக்கவும் ஏற்பாடு



▲ புதுச்சேரியில் தாகூர் அரசுக் கல்லூரியில் மாணவர்களின் வருகை பதிவுகளை பெற்றோர் பார்வைக்காக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டும் கல்வியமைச்சர் கமலக்கண்ணன்.

■ புதுச்சேரி

இந்தியாவில் முதல் முறையாக தாகூர் அரசு கலைக்கல்லூரி மாணவர்களின் வருகை பதிவேடு பெற்றோர் பார்வைக்காக இணையத்தளத்தில் வெளியிடப்படுகிறது என்று கல்வியமைச்சர் கமலக்கண்ணன் தெரிவித்தார்.

புதுச்சேரி தாகூர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பசுமை வளாகத் திட்டத்தின் ஒரு பகுதியாக அலங்கார செடிகள், பழ மரக்கன்றுகள் மற்றும் பூச்செடிகள் நடும் விழா நேற்று நடந்தது.

இதில் அமைச்சர்கள் கமலக் கண்ணன், ஷாஜகான் ஆகியேர் பங்கேற்று பசுமை வளாகத் திட்டத்தினை தொடங்கி வைத்து மரக்கன்றுகளை நட்டனர் தொடர்ந்து திறன் மிகு வகுப்பை (ஸ்மார்ட் கிளாஸ் ரூம்) திறந்து வைத்து, ஜெனரேட்டரை இயக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் அமைச்சர் கமலக்கண்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

புதுச்சேரி உயர்கல்வித்துறை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையிலான உறவு மேம்படும் சூழல் உருவாகியுள்ளது.

இதன் மூலம் முதலாமாண்டு மாணவர்களின் முழு விவரங்களை வகுப்பாசிரியர் பெற்றுக் கொண்டு, அந்த மாணவர் கல்வியில் செலுத்தும் அக்கறை, அவர்கள் பெற்றோர், வாழும் சூழல் ஆகியவற்றை கண்காணிப்பார். இத்திட்டத்தை கடந்த 4 மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்தோம். இத்திட்டம் அனைத்து கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஒழுக்க சீர்கேடு, கல்வியில் பின்தங்குவது ஆகியவைகளுக்கு முக்கிய காரணமே அவர்கள் வகுப்பறைக்கு செல்லாததுதான்.

அவர்கள் வகுப்புக்கு வந்தால் படிக்க ஆரம்பித்து விடுவார்கள். இதற்காகவே மாணவர்களின் வருகை பதிவை கல்லூரி இணைய தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

இதன் மூலம் பிள்ளைகள் வகுப்புக்கு சென்றார்களா என்பதை பெற்றோர் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவிலேயே கலை, அறிவியல் கல்லூரி மாணவர்களின் வருகை பதிவை இணையதளத்தில் பதிவேற்றுவது தாகூர் கலைக் கல்லூரியாகத்தான் இருக்கும் என்று குறிப்பிட்டார்.